[1981 மே 8

பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு

*வினா எண். 1023 —திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டைத் தொகுதி பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில் குடிதண்ணீர் கிடைக்காமல் மக்கள் சிரமப்படுவது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் என்றால், இதுவரை எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) பட்டிவீரன்பட்டி பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிற போது பதிலில் பரிசீலனையில் உள்ளது பரிசீலனையில் உள்ளது என்று சொன்னால் பரிதாபத்திற்குரிய நிலைதான். அங்கே தண்ணீர் இல்லாமல் அவஸ்தைப் படுகிறார்கள். ஓடையில் வரக் கூடிய சாக்கடைத் தண்ணீரைக் குடிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது ஆகவே போர்கால முக்கியத்துவம் கொடுத்து அந்தத் திட்டத்தை விரைவாக சாங்ஷன் செய்து குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படுமா ? எத்தனை லட்சத்திற்கு எஸ்டிமேட் போடப்பட்டு அனுப்பப் பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, இப்பேரூராட்சியில் வசித்து வரும் மக்கள் தற்சமயம் பேரூராட்சியால் செயல்படுத்தப்பட்ட இரண்டு திறந்த கிணறு களிலிருந்து குடிநீர் எடுத்து வருகிறார்கள். இக்கிணறுகளிலிருந்து கிடைக்கும் நீர் போதுமானதாக இல்லாமையாலும், கோடை காலங்களில் இக்கிணறுகள் வறண்டு விடுவதாலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விரிவான ஆய்வின் பிறகு 1978 ஆம் ஆண்டு இப்பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூ. 14.40 லட்சத்தில் திட்டம் அமைக்கவும் ரூ. 62 ஆயிரத்தில் திட்டத்தைப் பராமரிக்கவும் ஒரு உத்தேச மதிப்பீடு தயார் செய்தது. இத்திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: துணைத் தலைவர் அவர்களே. மறுபடியும் பரிசீலனையில் உள்ளது என்றுதான் அமைச்சர் அவர்கள் கருணை காட்டாமல் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 14.40 லட்சம் ரூபாய் திட்டம் என்று சொல்கிறார்கள், ரீபேயிங் கெபாசிட்டி இல்லை ஆகவே தள்ளி வைத்துக் கொண்டே இருக்கிறோம் என்று அங்கே உள்ள இலாகாவினர் சொல்கிறார்கள்.

1981 மே 8] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

[முற்பகல் 9-40]

அதற்கு அந்த ஊரிலே உள்ளவர்கள் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கட்டத்தயாராக இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை 30 நாட்களுக்குள்ளாகவாவது, ஒரு ஸ்பெஷல் ஸ்கீமாகப் போட்டு எடுத்துக் கொள்ள அமைச்சரவர்கள் வழிவகை செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, எந்தத் திட்டமாக இருந்தாலும் பரிசீலனை செய்யாமல் கையெழுத்துப் போட முடியாது. திட்டம் அங்கிருந்து வந்த பிறகு படித்துப் பார்த்து, 14.40 இலட்சம் எக்சிகியூஷனுக்கு மெயின்டெனன்ஸ் பராமரிப்புக்காக 62,000 என்றால் எந்தப் பேரூராட்சி என்று பார்த்து, பணம் இருக்கிறதா என்று பார்த்து, இதையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். நீங்கள் கூட கடைக்குப்போய் புடவை வாங்குவது என்றால் பரிசீலனை செய்துதான் வாங்கவேண்டும், போனவுடனே எடுத்துக் கொண்டு வந்துவிட முடியாது. எனவே, பரிசீலனை செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன காரணத்தினால் இதை விரைவாகப் பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தற்போது பரிசீலனையில் இருக்கின்ற திட்டத்திலே எந்தெந்தப் பகுதிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் அந்த பட்டிவீரன்பட்டியில் ஒரு பகுதி என்னுடைய தொகுதியில் இருக்கிறது. வேறு பஞ்சாயத்தாக இருந்தாலும் அதுவும் சேர்த்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தனிக் கேள்வி போட்டால் விரிவான தகவலைத் தரலாம். ஆனால், இங்கே இருப்பது பட்டிவீரன்பட்டி, மதுரை மாவட்டத்தில் நிலக் கோட்டை தாலுக்காவில் தேர்வுநிலைப் பேரூராட்சியாகும். இப்பேரூராட்சியில் கீழ்க்கண்ட கிராமங்கள் இருக்கின்றன என்று இருக்கிறதே தவிர, இந்தக் குடிநீர்த்திட்டம் மற்றக் கிராமங்களுக்கு பொருந்துமா, அது ஒரு காம்பிரெஹன்சிவ் ஸ்கீமா என்பதைப் பற்றிய தகவல் இங்கு இல்லை. தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பரகுமடி நகரப் பஞ்சாயத்துப் பகுதியில் பாதாள கழிவு நீர்த் திட்டம் அமைத்தல்

*வினா எண். 1024 — திரு. செ. சிவசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரமகுடி நகரப்பஞ்சாயத்தில் பாதாள கழிவுநீர் திட்டம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?